1957.

# இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம்

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

ஆ. வி. மயில்வாகனம்
6-8-57.

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்

## இயக்கம் ஆரம்பித்த வரலாறு.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1956-ம் ஆண்டு ஆனி மாதம் செயலாற்றத் தொடங்கியது. இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்கள் வரலாற்றில் இம்மாதம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய மாத மாகும். தமிழ்ப் பேசும் மக்கள் தமது ஐதிகத்தையும் பண்பாட்டையும், மொழியையும் பாதுகாக்க உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளாதுவிடின் அவற்றை முற்ருக இழந்துவிடுவர் என்ற உண்மை துலக்கமுற்ற காலம் அது.

அந்நாட்களில் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களின் எதிர்காலத்தை நன்கு ஆராய்ந்த ஒரு சில தமிழன்பர்கள், தமிழ்ப்பேசும் மக்கள் தமது தொழிற்சக்தியைப் பெருக்கவும், தமது பண்பாடு, மொழி ஆகியவற்றைப் பேணவும் வேண்டுமாயின், தமக்கென ஒரு பல்கலைக் கழகத்தைப் பெற்றிருத்தல் அவசியம் என்ற பேருண்மையை உணர்ந்தனர். அவர்களுடைய உணர்வின் வெளிப்பாடே பல்கலைக்கழக இயக்கமாகும்.

## அரசாங்கக் குழுவினர் சமர்ப்பித்த முடிவுகள்.

ஏறத்தாழ அக்காலத்திலே இன்னெரு நிகழ்ச்சியும் நடந்தது. தேசிய மொழிகள்மூலம் உயர்தரக்கல்விபுகட்டுவதுபற்றி ஆராய அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற குழுவினர் தமது முடிபுகளைத் தொகுத்துக் கொண்டிருந்தனர். அவரது அறிக்கை அப்பொழுது வெளிவரவில்லையாயினும் அதனுள் அடங்கிய முடிபுகள் பொதுவாக யாவருக்கும்தெரிந்திருந்தது. அவ்விசாரணைக் குழுவினர் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த முடிபுகள் மிகவும் முக்கியமானவை. இந்நாட்டில் உயர்தரக் கல்வி வசதிகளை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டுமென்றும், அவற்றை எவர் எவருக்கு அளித்தல் வேண்டுமென்றும் அம்முடிபுகள் அர,

சாங்கத்திற்கு ஆலோசனை கூறின. (மாணவரின்) திற மையை நோக்காது, சனத்தொகையை நோக்கியே உயர் தரக் கல்வி அளிக்கப்படுதல் வேண்டுமென்று அக்குழு வினர் கூறினர். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி அவ ரது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது. அவரது எண்ணங்களின் போக்கைக்காட்ட இப்பகுதியுதவும்,

"மேலும் சமூகங்களின் சிறப்புகளுக்கு ஏற்ப உயர் தரக்கல்வி அளிப்பது உகந்ததாகையால், சிங்களப் பல் கலைக் கழகங்களும் தமிழ்ப் பல்கலைக் கழகங்களும் அமைத் தல் தேவையாகிறது. அப்பொழுதுதான் பல்கலைக் கழகத் தில் பயிலும் ஒவ்வொரு தமிழ் மாணவனுக்கும் ஆறு சிங் கள மாணவர் பயிலுதல் முடியும்."

இஃது ஒருபுறமிருக்க, 1954-ம் ஆண்டிலேயே பல் கலைக் கழகத்தின் நிலைமை என்ன? மொத்தம் 2434 மாண வர்களில் 1461 மாணவர்கள் சிங்களவர்; 872 மாணவர் கள் தமிழர்; 101 மாணவர்கள் பிற சமூகத்தினர்.

அரசாங்கம் வெளிப்படையாகக் குழுவினரின் முடிவு களை நடைமுறைக்குக் கொண்டுவராவிடினும் காலக்கிர மத்தில் இம்முடிபுகள் கடைப்பிடிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. விசாரணைக்குழுவில் உறுப்பினராயிருந்த ஒருவர் தற்சமயம் அரசாங்க கருமமொழி அலுவலகத் தலைவராயமர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

## பேராதனையில் இடம் கிடைப்பதரிது.

இக்காரணங்கள் ஒருபுறமிருக்க தற்சமயமுள்ள இல ங்கைப் பல்கலைக் கழகத்தை நோக்குவோம். பேராதனை யிலுள்ள பல்கலைக்கழகத்தில் இடம் பெறுவதற்கு தமிழ் மாணவர் பெரும்பாடு படுகின்றனர்; இடங்கிடைப்பது வெகு கடினம். இதனாலே தமது உயர்தரக் கல்வியைப் பெறுவதற்குப் பலர் இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங் களை நாடுகின்றனர். இன்று 1500-க்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக் கழ

கங்களிலும் படித்துக்கொண்டிருக்கின்றனர். விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல் முதலிய துறைகளில் சேர்ந்து படிப்பதற்கு இந்தியாவிலும் இடம் பெறுவது கடினமாயிருக்கிறது. இந்திய மாணவருக்கே அங்குள்ள பல்கலைக் கழகங்கள் போதாத நிலைமையிலுள்ளன. இந்நிலையில் நமது தமிழ் மாணவர்களில் பல நூற்றுக்கணக்கானோர் எவ்வித உயர்தரக் கல்வியும் கற்கமுடியாமல் திண்டாடுகின்றனர். வருந்தத்தக்க இந்நிலையொன்றைக்கொண்டே, நமக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று தேவையெனத்திட்டமாகக் கூறலாமன்றோ? விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல் முதலிய துறைகளிலே திறமையெய்துவதற்கோ, கல்விபெறுவதற்கோ எமது மாணவருக்கு எவ்வித வசதிகளுமில்லையெனக் கண்டோம். இன்றைய விஞ்ஞானயுகத்தில் இவை எத்துணை முக்கியமானவை என்று கூறவும் வேண்டுமோ? இதுமட்டுமல்ல.

## பேராதனையில் தமிழ் மாணவர் நிலைமை.

ஒருவாறுகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற மாணவரின் நிலையென்ன? நாளடைவில் தமிழ் மாணவர் அங்குக் காண்பதென்ன? தமக்குப் புறம்பான பண்பாட்டுச் சூழலில் ஏதோ வெறுக்கப்பட்டவர்கள் போல அவர்கள் வாழ்க்கையமைந்துள்ளது. பேராதனையிலுள்ள தமிழர் நிலை வருடாவருடம் சீரழிந்து வருகிறது என்பது கண்கூடு. இந்நிலை மாணவருக்கு மட்டும் உரியதல்ல; ஆசிரிய வகுப்பையும் பாதித்துள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடிப்பதற்கு நாம் இடந்தரலாகாது. நமது சமூகத்தின் எதிர்காலத் தலைவர்களாக வரக்கூடிய இளஞ் சந்ததியினர் தமது கல்வியைத் தமது ஐதிகத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற சூழலிற் பெறுதல் மிக மிக அவசியம். தமக்குச் சொந்தமான — தாம் உரிமை பாராட்டத்தக்க — வாழ்க்கை முறையின் மத்தியில் அவர் வளருவது அதைவிட அவசியமானது.

## தனிப் பல்கலைக்கழகத்தின் அவசியம்.

இந்த இடத்தில், தென்னிந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்கள் நமக்குப் போதாதோ என்று சிலர் எண்ணக் கூடும். அதைச் சிறிது ஆராய்வோம். ஒரு சமூக மக்களின் கருத்துவளர்ச்சியின் திரண்ட வடிவம் அம்மக்கள் பெற்ற பல்கலைக் கழகம். தன்னைப்படைத்த மக்களுடைய ஐதிகத்தையும் பண்பாட்டையும் தன்னுள்ளடக்கிய பெருங் களஞ்சியம் பல்கலைக் கழகமே. அது மக்களினது பண்பாட்டு, சமூக, விஞ்ஞானத் துறைகளிலுள்ள தேவைகளையறிந்து தக்க துணையாக நிற்பது. எனவே அதனுடைய உதவியை மக்கள் நாடுகின்றனர். மக்கள் குழப்பங்களிலிருந்து சிறிது ஒதுங்கி விருப்பு வெறுப்பற்ற தமது ஆராய்ச்சி முறையாலும், ஆழ்ந்த அறிவு மேம்பாட்டினுலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் சமூகத்திற்குத் தேவையான துறைகளில் உழைக்கின்றனர். அதனுலேயே பல தேசிய இயக்கங்களில் பல்கலைக் கழகங்கள் தலைமை தாங்குகின்றன. இது வரலாறு கண்ட உண்மை. தமிழ் இலக்கியங்களைக் கற்றறிந்த எவரும் தமிழ்ச் சங்கங்களைப்பற்றி அறிவர். அக்காலத்துப் பல்கலைக் கழகங்களாக விளங்கிய சங்கங்கள், இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எத்தகைய தொண்டாற்றின என்பதை நாம் அறியலாம்.

ஆகையால் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் தமது பலதிறப்பட்ட சிக்கல்களுக்கும் வெற்றி காண்பதற்கும், தமது பண்டைப் பெருமைக்கும் தொன்மைக்கும் ஏற்ப வாழ்வதற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகமொன்று அத்தியாவசியம் என்பது தெளிவாகின்றது. தனிச் சிங்களச் சட்டம் நடைமுறையிலிருக்கும் நமது நாட்டில், இத்தேவை இரண்டு மடங்காகிறது. எனவே நமது மொழியையும் பண்பாட்டையும், சமூகத் தேவைகளையும் கண்காணித்து, நமது சமூகம் சீரழிந்து சிதையாமற் காப்பதற்குப் பல்கலைக்கழகம் ஒன்று முன்னெக்காலத்

தையும்விட இந்நாட்களில் மிகமிக அவசியமாகின்றது. எமது சிங்கள நண்பர்கள் இதை உணருதல் வேண்டும்.

## தமிழ்மக்களின் பல சிக்கலான பிரச்சினைகள்

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுடைய பிரச்சினைகளில் பலதிறப்பட்ட சிக்கல்களை நோக்கும்பொழுது மொழிப்பிரச்சினை ஒருபுறமிருக்க தமிழ் மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவது கண்கூடாகத் தெரிகிறது. தனிச் சிங்களச் சட்டம் காரணமாக இந்நிலைமை மேலும் மோசமடையுமென்பதில் சந்தேகமில்லை.

நமது வியாபாரமும் விவசாயமும் விருத்தியடையாத நிலையிலுள்ளன. கைத்தொழில்களில் குடிசைத் தொழில் கூட இன்று இல்லை. வன்னிப் பிரதேசத்தில் நம்மவர் குடியேறும் தேவையுள்ளது. காட்டுக் காய்ச்சல் இன்று பெரும்பாலும் தடுக்கப்பட்டிருந்தாலும் வேறு பல சிக்கல்கள் உள்ளன, கற்பக விருட்சமெனப்படும் நமது பனைச் செல்வத்தைத் தக்கபடி நவீன முறைகளிற் பயன்படுத்தினாற் பலருக்கு வேலையும் சமூகத்துக்குப் பலனும் கிட்டும். இச்செல்வம் இன்று கவனிப்பாரற்றுக்கிடக்கிறது. இவைமட்டுமா? நமது நீர்ப்பாசன வசதிகள் எந்நிலையிலுள்ளன? காற்றாடிச் சூத்திரங்களினால் இறைக்கும் முறை நன்கு பரிசோதிக்கப்பட்டுள்ளதா? நெடுங்காலமாக எமது நாட்டவர், இந்தியா, பர்மா முதலிய அயல் நாடுகளுடன் போக்குவரத்துச் செய்த கப்பற் சாதனங்கள் இன்று எங்கே? இவை ஏன் மறைந்தன? எம்மைச் சுற்றியுள்ள சிக்கல்களிற் சில இவை. இவற்றை ஆராய்ந்து குறைகளை நிவர்த்திக்க வழிவகைகளைக் காண்பது பல்கலைக் கழகத்தின் பணியும் கடமையும். ஒரு பல்கலைக் கழகமிருந்தாலன்றி இவற்றை முழுக் கவனத்துடனும் நாம் ஆராய முடியாது. நமக்குரிமையுள்ள ஆராய்ச்சிக்கூடத்திலேதான் நமது சிறப்பான ஆராய்ச்சிகளை நடத்துதல் முடியும்.

## திரைகடலில் கப்பல் ஓட்டினான் தமிழன்

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களின் வாழ்க்கைப் போக்கைத் திருத்தியமைக்க உதவுவதுடன் அவர் தம் உள்ளத்துக்குப் புத்துயிரூட்டும் ஆற்றல்வாய்ந்த நிலையமாக எமது பல்கலைக் கழகம் அமையவேண்டுமென விரும்புகிறோம். வெகு காலமாக நம்மவர் அரசாங்க

உத்தியோகங்களை எதிர்பார்த்து வாழ்ந்துவிட்டனர். இது கடந்த சில காலத்தில் நமது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமே. ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வரு முன்னர் எமது தமிழ் மக்கள் பல்வேறு துறைகளிற் சிறப்புற்றிருந்தனர்; அவர் வாழ்க்கை நிறைவுள்ளதா யிருந்தது. ஆயுள்வேத வைத்தியம், உழவுத் தொழில், வங்கியமைப்பு, வணிகம், கலைப்பணிகள், கப்பலோட்டுந் தொழில், கடல் தொழில் முதலிய பல துறைகளிலும் ஈடுபட்டிருந்தனர். புதுப்புதுத் துறைகளிற் சென்று வெற்றி காணுதல் அவர் இயல்பாயிருந்தது. புதுப்புது முயற்சிகளிற் கூசாது இறங்கினர். அவரது கப்பல்கள் மேற்கே கிரேக்க நாட்டிலிருந்து கிழக்கே இந்தோனேசியா, சீனம் வரை சென்று மீண்டன. திரை கடலோடும் அத் தீரப் பண்பிற்கு என்ன நேர்ந்தது? எமது ஆற்றலையும் புத்திக்கூர்மையையும், திறமையை யும் முற்றிலும் அரசாங்கசேவையில் செலவு செய்கிறோம். அதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

## அரசாங்க பதவிகளில் திறமை பலியாகியது

அரசாங்க உத்திரவாதம் என்ற பலிபீடத்தில் எமது பரம்பரைத் திறமைகளைப் பலியிட்டுள்ளோம். இப்படு குழியிலிருந்து எமது சமூகத்தை மீட்கப் பல்கலைக்கழகம் உதவி செய்தல் வேண்டும்; வழிகாட்டுதல் வேண்டும்; புதிய தொழில்களையும், ஆராய்ச்சிகளையும் எமது இளை ஞர் மேற்கொள்ளுதல் வேண்டும். தமது எதிர்காலத்தில் நம்பிக்கைகொண்டு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய அவருக்குப் பல்கலைக் கழகம் பாதை வகுத்தல்வேண்டும்.

இவற்றிற்கும் மேலாக இன்னொரு பணியும் எமது பல்கலைக் கழகத்திற்கு உண்டு. மனித குலத்தை உய் விக்கும் பல அரிய உளப் பண்புகளை எமது முன்னோர் வளர்த்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக எமது மக்க ளின் ஒழுக்கத்தை வகுத்து வந்த திருக்குறள், நாலடியார் முதலிய நூல்கள் அவ்வுண்மைகளைக் கொண்டுள்ளன.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் இவற்றையெல்லாம் கவனியாமல் வாழ்கின்றனர். இன்று எமது இளைஞருக்குத் தேவையான பண்புகள் யாவை? நன்றுந் தீதும் கண்டறியும் ஆற்றல், செயலாற்றவல்ல திடசித்தம், மலைபோல வருந் துன்பங்களைக் கண்டஞ்சாமை, ஒழுக்க உயர்வு முதலிய உயர்ந்த பண்புகளை நமது சமூகத்தில் வளர்த்தல் வேண்டும். எதிர்காலத்தில் இப்பண்புகள் நமது இளைஞர்களுக்கு உறுதுணையாக நிற்கவல்லன. வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப அமைந்த ஒரு பல்கலைக் கழகத்திலேயே இத்தகைய பண்புகளை நாம் பேணி வளர்த்தல் இயலும்.

## எங்கு எப்படி ஏற்படவேண்டும்?

இவ்வாறு தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது அது எங்கு நிறுவப்படல் வேண்டும் என்ற கேள்வி எழுதல் இயல்பே. இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்ந்துவந்தாலும் வட கிழக்குப் பிரதேசங்களில் தமிழர் பெருந்தொகையினராக வாழ்கின்றனர் என்பது அறிந்ததே. இப்பிரதேசம் தமிழருக்குரியது. அவர்தம் உரிமை நிலம்; உயிரைக் கொடுத்துங் காக்கப்படவேண்டியது. இப்பிரதேசத்திலேயே நமது பல்கலைக்கழகம் அமையும். தமிழ்ப் பல்கலைக்கழகம் எத்தகைய முறையில் அமைதல் வேண்டுமென்பது இன்னொரு கேள்வி. பேராதனைப் பல்கலைக் கழகம்போலத் தனித்தியங்கும் பல்கலைக் கழகமா, அல்லது கேம்பிரிட்ஜ் லண்டன் பல்கலைக் கழகங்களைப்போல பல உறுப்புக் கல்லூரிகளைக்கொண்ட பல்கலைக்கழகமா, அல்லது இணைக்கப்பெற்ற பல கல்லூரிகளையுள்ளடக்கிய பல்கலைக் கழகமா நாம் அமைக்கக்கூடியது என்பது சிந்தித்தற்குரியது. உலகின் பல பாகங்களிலுமுள்ள பல்கலைக் கழகங்களின் வரலாற்றை,

யும் அமைப்பையும் நன்காராய்ந்த பல்கலைக் கழக இயக்கத்தினர் எமக்கு ஏற்ற பல்கலைக் கழகத்தை நிச்சயித்தனர்.

சில கல்லூரிகளை யுள்ளடக்கிய பல்கலைக் கழகமே எமக்கேற்றது. இவ்வுறுப்புக் கல்லூரிகள் யாழ்ப்பாணம், வவனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைக்கப் பெறுதல் வேண்டும். பலவற்றையும் நோக்குங்கால் பொறியியற் கல்லூரி திருக்கோணமலையிலும், விவசாயம் - மிருகவைத்தியம் பயிற்றும் கல்லூரி வவனியாவிலும், கலைப்பகுதி பொது விஞ்ஞானத்துறை பயிற்றும் கல்லூரி மட்டக்களப்புப் பகுதியிலுள்ள வந்தாறுமூலையிலும், தமிழ்ப் பிரதேசத்தில் மிகப்பெரிய வைத்தியசாலையை யாழ்ப்பாணம் பெற்றுள்ளதால், வைத்தியக் கல்லூரியை யாழ்ப்பாணத்திலும் அமைத்தல் நலமெனத்தோன்றுகிறது. இவற்றைத் தவிர பிறதுறைக் கல்லூரிகளும் அமைக்க நேரிடலாம். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சமயத்தாபனங்களும் தமக்கெனக் கல்லூரிகள் அமைக்கவும் விரும்பலாம். கிறிஸ்தவர், இஸ்லாமியர், இந்துக்கள் தத்தஞ் சமயக் கல்வியைப் புகட்ட, பல்வேறு உறுப்புக் கல்லூரிகளிலேயே வசதிகள் செய்ய முன்வரலாம். பல்கலைக் கழகம் நிறுவப்படுங் காலையில் இவ்விவரங்களைக் கவனிக்கலாம்.

பண உதவியின்றி எந்தப் பல்கலைக்கழகமும் இயங்க முடியாது இது சம்பந்தமாகச் சில கேள்விகள் எழுதல் இயல்பே. முற்றுகவோ அல்லது ஓரளவோ அரசாங்க உதவியின்றிப் பல்கலைக் கழகமொன்றினை அமைத்தல் முடியுமோ? அரசாங்கம் எவ்வித உதவியுந் தரமறுத்தால் என்ன செய்வது? இன்றுள்ள அரசாங்கம் நமக்கு எவ்வித உதவியும் செய்ய முன்வருமா என்று சந்தேகிக்கலாம். சனத்தொகை விகிதாசாரப்படியே பல்கலைக் கழகக் கல்வியும் அமைதல் வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை என்பதற்குப் பல அறிகுறிகள் உள,

இனி, தமிழ் பேசும் மக்களுக்குப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்குத் தேவையானவை எவை என்பதை ஆராய் வோம். பல்கலைக் கழகத்திற் பயிலும் மாணவர் பயிற் றும் ஆசிரியர்கள், பல்கலைக் கழகக் கட்டிடங்கள், பிற வசதிகள் ஆகியவையே முக்கிய தேவைகளாம். மாண வர்களைப் பொறுத்தளவில் எமது இளைஞர்கள் இந்தியா விலுள்ள பல்கலைக் கழகங்களில் இடந்தேடியலைவதை முன்னர் குறிப்பிட்டோம். இவர்களைத் தவிர, வெளிநாடு சென்று கல்வி பயில வசதியில்லாமலும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற முடியாமலும் இருக்கும் பல நூற்றுக்கணக்கான மாணவர் நமது நாட்டி லுள்ளனர். எனவே பல்கலைக் கழகக் கல்வி வேண்டிய மாணவர் தொகை குறைவற்றது என்பது தெளிவு. மற் றது, பல்கலைக் கழகத்திற் போதிக்கும் ஆசிரியர் தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினரின் பெயர்களை ஒருமுறை புரட்டிப் பார்த்தால், எம்மிடையே எத்தனை தலைசிறந்த கல்வியாளர் உளர் என்பது தெரியவரும். தக்க சமயம் வரும்பொழுது இவர்களெல்லாம் பல்கலைக் கழகப் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் சேவைசெய்யச் சித்தமாயுள்ளனர். இவர்களைத் தவிர எமது சமூகத்தில் பல சிறந்த கல்விமான்கள் அரசாங்க சேவையிலுள்ளனர். இவர்களும் அவசியம் நேரின் பல்கலைக் கழகத்திற் பணியாற்றத் தயங்கமாட்டார்கள் என்பது உறுதி.

## பெருந் தொகைப்பணம் தேவை

பல்கலைக்கழகத்திற்கு கட்டிடங்கள் தேவை. பல்கலைக் கழகத்தைப்பொறுத்த அளவில் கட்டிடங்கள் அதிக முக் கியமானவையல்ல என்பது கூறுமலே விளங்கும். கட்டி டங்களிலும்பார்க்க, விஞ்ஞானப் பயிற்சிக் கூடங்களும் உயர்ந்த நூல் நிலையமுமே முக்கியமானவை. நவீன விஞ்ஞானக்கல்வி பயில்வதற்கும் பொறியியற் சாதனங் களையமைப்பதற்கும் அதிக பணம் தேவையாயிருக்கும். இவற்றில் செலவிடும் பணம் தக்க பலனைத் தருவதும் உறுதி. நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வரும் நூல்களை

யுடைய நூல் நிலையங்களும் மிகமிக அவசியமானவை. இவ்விரு தேவைகளிற் பெரும்பாலானவை பிறநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவன. பெருந்தொகைப் பணத்தை விழுங்குவன. ஆகையாலேதான் தமிழ்ப் பேசும் மக்களிடமிருந்து பண உதவியை எதிர்பார்த்துப் பல்கலைக் கழக இயக்கத்தினர் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் பொதுமக்களிடமிருந்து பெறுதல் முடியுமோ என்ற ஐயம் ஒருபுறம் எழலாம். எனினும் பல்கலைக்கழக இயக்க பிரசாரக் குழுவினர் தாம் சென்றவிடமெல்லாம் போதிய ஆதரவைப் பெற்றுள்ளமை மகிழ்ச்சிதருஞ் செய்தியாகும். இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள அன்பர்கள் பலர் தங்களால் இயன்ற பண உதவியைச் செய்ய முன் வந்துள்ளனர்.

பண்டைக் காலத்திற் பல்கலைக் கழகங்கள் மன்னர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. வரம்பற்ற தமது செல்வத்திலிருந்து வரையாது கொடுத்துக் கல்வி நிலையங்களை வேண்டியபொழுதெல்லாம் வளர்த்தனர். மேற்கத்திய நாடுகளில் கடந்த ஒன்றரை நூற்றுண்டுக் காலத்தில் எத்தனையோ கோடீசுவரர்கள் பல்கலைக் கழகங்களை ஸ்தாபித்திருக்கிருர்கள். நமக்கு அணித்தாயுள்ள தென்னிந்தியாவில் அண்மையில் ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் தனது பணத்திலிருந்து பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபித்தார். நம்மிடையே மன்னரும் கோடீசுவரரும் இன்மையால், நமது மக்களுடைய ஆதரவையே நாம் எதிர்பார்க்கவேண்டும். நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று கவிஞன் பாரதி பாடியுள்ளானன்ருே! பொது மக்களின் சிறு சிறு பண உதவித் தொகைகளைத் திரட்டி பல்கலைக்கழகமொன்று அமைக்க முற்படுதல் புதியதொரு முயற்சியே. இத்தகைய முயற்சி நமது சமூகத்தவருக்குச் சவால் விடுத்திருக்கிறது எனலாம். இதை ஏற்று வெற்றி காணுவது எமது கடமை. தம்மாலியன்ற தியாகங்களைச் செய்தும், உழைப்பை நல்கியும் இப்பல் கலைக்கழக இயக்கத்தை வெற்றிகரமாக்குவது தமிழரது

தலையாய கடமையாகும். பண உதவி இருக்குமாயின் பல்கலைக்கழகம் உடனடியாகத் தொழிற்படுதல் முடியும்.

## அரசாங்கம் தடை விதித்தால் ?

இந்நிலையில் இன்னெரு அச்சம் சிலருடைய மனதிற் தோன்றலாம். அரசாங்கம் இம் முயற்சிக்குத் தடையாக விருந்தால் என்ன செய்யலாம் என்று சிலர் கேட்கலாம். அதுவும் நியாயமே. எனினும் அச்சமயத்தில் பல்கலைக் கழகத்திற்காகப் போராடுதல் நமது புனித கடமையாக வும் உரிமையாகவும் இருக்கும். அரசாங்கம் நினைத்தால் பல்வேறு விதங்களில் பல்கலைக்கழகத்திற்குக் குந்தகம் விளைக்கலாம். உதாரணமாக நமது பல்கலைக் கழகம் அளிக்கும் பட்டங்களைக் கணிக்காமல் விடலாம்; பல் கலைக் கழகத்திற்கு உரிமை உறுதி வழங்க மறுக்கலாம். இவை தடைகளே. எனினும் இத்தகைய தடைகளைச் சமாளிக்க நாம் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். மேலும் எமது பல்கலைக் கழகத்தில் கல்வியின் தரம் உயர்ந்ததா யிருந்தால் பல்கலைக் கழக சம்மேளனம் எமது பட்டங் களையும் பட்டதாரிகளையும் அங்கீகரிக்கலாம். இது ஒன்றே எமது உண்மை நிலையை உலகத்திற்கு எடுத்துக் காட்டும்.

## சென்ற இடமெல்லாம் சிறப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகப் பட்டங்களை அரசாங்கம் மதிக்காது விட்டால் பட்டதாரிகளின் கதி என்ன என்று சிலர் கேட்கலாம். இதற்கான விடை மிகவும் எளிதா னது. இப்பொழுதே அரசாங்க உத்தியோகங்கள் நம்ம வர்க்கு கிட்டாதனவாகி வருகின்றன. காலப்போக்கில் - ஏன் அடுத்த சில ஆண்டுகளுக்குள் - அவை முற்ருக எமக்குக் கிடைக்கா. எனவே தனிப்பட்ட முயற்சியினுல் உழைப்பதே நாம் செய்யக்கூடியதாகும். பலர் பிற நாடு களுக்குச் சென்று உழைக்கலாம். எமது சமூகத்தினரில் எத்தனையோபேர் கடல் கடந்து எங்கெங்கெல்லாமோ சென்று வாழ்கின்றதைக் காணலாம். கனடா, இங்கி லாந்து, தென்னுப்பிரிக்கா, இந்தியா, மலாயா, போர்னியோ முதலிய எத்தனையோ நாடுகளில் நமது

மக்கள் சென்று உழைத்து வாழ்கின்றனர். இந்தியாவில் மட்டும் ஆயிரக்கணக்கான தொழில் நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள். தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றிலும் நிலைமை அவ்வாறே. ஔவையார் பாடியது போல கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப் பன்றோ! இவ்வாறு பிறநாடுகளுக்கு ஒருசிலர் செல்லலாம்.

## தமிழ்ப் பகுதிகளிலேயே நல்ல வாய்ப்பு

எனினும் நமது தமிழ்ப் பிரதேசங்களிலேயே போதிய தொழில் வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப் புண்டு. இதுகாலவரையும் எமது திறமைகளெல்லாம் பிறருடைய பிரதேசங்களைச் சீராக்குவதில் - காடுவெட் டிக் களனியாக்குவதில் - செலவழிந்தது. உழைத்த நம்மை இன்று உதாசினம் செய்துவிட்டார்கள்; உரிமை யற்றவர்களாக்குகிறார்கள். எனினும் நமது பரம்பரைப் பூமியான கிழக்கு வடக்கு மாகாணங்கள் நம் வசமிருக் கின்றன. இவ்வளவு காலமுங் கவனிப்பாரற்றுக் கிடந்த களனிகள் உள; கடற்கரைகள் உள; கடல் உளது; நிலப்பரப்பு உளது. குளங்கள் உள்ளன. இவற்றை இனிப் பேணுதல் வேண்டும். எழுந்து வரும் இளைஞர்கள் பெரும்பாலோர் இம்முயற்சிகளில் இறங்கவேண்டும். எனினும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் விஞ்ஞான ரீதியாக இருத்தல் அவசியம். நமது வாழ்க்கை வளமுற படித்த விவசாயிகளும், மிருக வைத்தியர்களும், பொறி யியல் நிபுணர்களும், வைத்தியர்களும், ரசாயன அறிஞர் களும் மிகத் தொகையினராகத் தேவை. இவர்களையெல் லாம் உருவாக்கப் பல்கலைக் கழக மொன்று அவசிய மல்லவா? பல்கலைக் கழகத்தைத் தவிர வேறெந்த நிலையத்தாலும் இப்பணியை வெற்றியுடன் செய்ய முடி யாது என்பது உறுதி.

## பல்கலைக்கழகத்தின் முக்கிய இலட்சியம்

இறுதியாக நமது பல்கலைக் கழகத்திற்குரிய முக்கிய மான பணியைச் சிறிது நோக்குவோம். எமது ஐதிகத் தையும் பண்பாட்டையும் மொழியையும் பாதுகாப்ப தென்றால் அதற்குப் பொருள் என்ன? நமது முன்னோர்

அளித்த அருஞ் செல்வங்களை நாம் அனுபவிப்பதுமட்டு மன்றி அவற்றைத் தூய முறையில் எமது எதிர்காலச் சந்ததியாருக்கும் அளித்தல் வேண்டும். மக்கள் பலவித இன்னல்களுக்குட்பட்டு இருட்டிற் சிக்கித் தவிக்கும் பொழுதெல்லாம், அறிவொளி கொண்டு நம்பிக்கைப் பாதையைக் காட்டி நடத்திச் செல்லும் புனித பணி பல் கலைக் கழகங்களையே சார்ந்தது.

நமது கலைகளும் இலக்கியங்களும் அரசாங்க ஆதரவைப் பெருத நிலையிலுள்ளவை. இன்றைய உலகில் அரசாங்கங்கள் பல வழிகளால் கலைகளை வளர்க்க முன் வருகின்றன. நமது நிலை அதற்கு முழு மாருக உள்ளது. எனவே நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளுதல் அவசியம். தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளுவது திராவிடரின் தனிச் சிறப்பு என்று அறிஞர் கூறுவர். நாம் நமது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்க உழைக்கவேண்டும். நிகழ்காலம் எதிர்காலத்தியல்பைத் திருப்பிவிடுமாதலால் நாம் கவனமாயிருத்தல் வேண்டும்.

## தமிழர் வரலாற்று நூல் இல்லையே

இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கு உள்ள ஒரு பெருங் குறைவையும் குறிப்பிடுதல் பொருத்தமாகும். இந்நாட்டில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களது வரலாறெதுவும் இதுகாறும் எழுதப்பட்டிலது. இன்று நம்மவர் அறிந்த வரலாறு மகாவமிசம் கூறும் வரலாருகும். மகாவமிசம் புத்தமத வரலாற்று நூல் என்பது அறிந்ததே. அண்மையில் புத்தசமய விசாரணைக் குழுவினர் வெளியிட்ட வரலாற்றுக் குறிப்புகளை நோக்கினுல் புத்தமதச் சால்பு வரலாற்றில் எவ்வாறு செலுத்தப்பட்டிருக்கிறதென்பது புலனுகும். எனவே இந்நாட்டிற் கிடைக்கக்கூடிய கல்வெட்டுக்களினின்றும் பிற வரலாற்றுச் சான்றுகளினின்றும் தமிழ்ப்பேசும் மக்களது வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதுதல் அவசியமாகின்றது. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றுங் கொண்ட நமது பல்கலைக் கழகத்திலேயே இப்பணியைச் செய்து முடிக்கலாம் என்று கூறவும் வேண்டுமோ?

## போதனு மொழி எது?

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் போதனுமொழி எதுவாயிருக்கும் என்னுங் கேள்வி சிலருக்கு எழலாம். இது பற்றி ஒன்றுமட்டுங் கூறலாம். நமது பல்கலைக் கழகமானது தமிழ்ப்பேசும் மக்களுக்குரிய பல்கலைக்கழகமேயன்றித் தமிழ்ப் பல்கலைக்கழகமல்ல. அது வெறும் கலாசாரத் தாபனமுமல்ல. போதனு மொழியானது போதிக்கப்படும் பாடத்தைப் பொறுத்து அமையலாம். உதாரணமாக, வைத்தியக்கல்வி, விஞ்ஞானம் முதலிய பாடங்களைச் சிலகாலத்திற்கு நாம் தமிழில் கற்பித்தல் இயலாது. எமது தமிழ்மொழி வெகு வேகமாக முன்னேறி வருகிறது என்பதில் ஐயமில்லை. சென்னை அரசாங்கம் அதற்கு அளிக்கும் ஆதரவு பாராட்டுதற்குரியது; மகிழ்ச்சியைத் தருவது. விரைவில் அது வேண்டியளவு வலுவையும் ஆற்றலையும் பெற்றுவிடும். எனினும் இன்றைய நிலையில் நமக்கு வேண்டிய உலக நோக்கைப் பெறுவதற்கும் பல நவீன உயர்தர விஞ்ஞானக் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கும் ஆங்கிலம் உதவியாயிருக்கும் என்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆங்கிலத்தை அவசரப்பட்டுப் புறக்கணிப்பது நமக்கே தீமையை யுண்டாக்கும்.

இதுகாறும், பல்கலைக் கழக இயக்கத்தின் பல்வேறு அம்சங்களைப்பற்றியும் அவ்வியக்கம் எதிர்காலத்திற் சமாளிக்க வேண்டியிருக்கும் பல்வேறு சிக்கல்களைப் பற்றியும், நமது கனவு — இலட்சியம் — கைகூடுமுன் எத்துணை உழைப்பு அத்தியாவசியமாயுள்ளது என்பது பற்றியும் சுருக்கமாகக் கூறினேம். தமிழினத்தின் நல்வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் நாமெல்லாரும் ஈடுபட்டிருக்கிறேம். அப்பணியின் முதற்படி பல்கலைக் கழகமொன்று அமைப்பதாகும். உதாரணமாகப் பாலஸ்தீனத்தில் யூதர்கள் தமக்கென ஒரு நாட்டை — இஸ்ரவேல் நாட்டை — கட்டியெழுப்பிய பொழுது முதற் கடமையாகத் தமக்கென ஒரு தேசிய பல்கலைக் கழகத்தை அமைத்தனர். யூத மக்களுக்கேற்பட்ட எத்தனையோ இன்னல்களுக் கிடையிலும் தேசிய பல்கலைக் கழகம் நந்தாவிளக்காய் அவர்களுக்கு நம்பிக்கையொளியைக் காட்டிவந்துள்ளது. எமது இன எழுச்சியின் வைகறைப்பொழுதை எதிர்நோக்கி நிற்கும் நாம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குவதற்கு, விரைவிலேயே பல்கலைக் கழகமொன்றினை நிறுவுவோமாக!

## OFFICE-BEARERS OF THE MOVEMENT.

### President:

Sir Waitilingam Duraiswamy, Kt., B.A., Former Speaker, State Council.

### Vice-Presidents:

Mr. C. C. A. Britto Mutunayagam, B.C.L., M.A. (Oxon.), Bar-at-Law. Retired Principal, Law College.

Prof. P. K. Chanmugam, M.Sc. (Lond.), M.R.C.S. (Eng.), F.R.C.S. (Eng), L.R.C.P. (Lond.), L.M.S. (Ceylon), Professor of Anatomy, University of Ceylon.

Mr. R. R Crossette-Thambiah, Q.C., Bar-at-Law, Former Solicitor-General.

Prof. C. J. Eliezer, M.A., PH.D. (Cantab.), D.Sc. (Lond.), Professor of Mathematics, University of Ceylon.

Prof. K. Kanapathipillai, B.A., PH.D. (Lond.), Vidwan (Annamalai), Professor of Tamil, University of Ceylon.

Mr. M. M. I. Kariapper, District Judge, Kurunegala.

The Rt. Rev. Sabapathy Kulandran, B.A. (Lond.), B.D., Bishop in Jaffna of the Church of South India.

Prof. A. W. Mailvaganam, O.B.E., M.A., PH.D. (Lond), B.Sc. (Lond.), F.N.A.Sc., Professor of Physics. University of Ceylon.

Prof. A. Sinnatamby, L.M.S. (Ceylon), F.R.C.S. (Edin.), F.R.C.S. (Eng.), M.R.C.O.G. (Gt. Br.) Professor of Obstetrics and Gynaecology, University of Ceylon.

Mr. P. Sri Skandarajah, District Judge, Jaffna.

Dr. S. Subramaniam, L.M.S. (Cal.), L.R.C.P. and S. (Edin.), Former Provincial Surgeon, Jaffna.

Rev. Fr. X. S. Thaninayagam, M.A., M.LITT., S.T.D.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



Mr. M. Tiruchelvam, B.A., LL.B. (Lond.), Deputy Solicitor General.

Mr. J. Tyagarajah M.A., L.L.B. (Cantab.), Bar-at-Law.

Mr. S. P. Vaithilingam, Proprietary Planter.

## General Committee:

Dr. C. Amirthalingam, B.SC., PH.D. (Lond.), Former Director of Fisheries.

Mr. C. Aiyathurai, Proctor, Vavuniya.

Mr. S. Arumugam, B. SC., (Lond.), B. SC. (Engineering), A.M.I.C.E., M.I.W.E., Deputy Director of Irrigation.

Dr. V. Appapillai, B.SC., PH.D. (Lond.), Reader in Physics, University of Ceylon.

Mr. C. S. Barr-Kumarakulasinghe, Advocate, Colombo.

Dr. (Mrs.) G. R. B. Barr-Kumarakulasinghe, M.R.C.P. (Edin)' D.C.H. (Eng.), L.M.S. (Cey.), Paediatrician.

Mr. R. Canagarayar, B.SC. Tech. (Manch.), A.M.C.T., A.M.I.-C.E., A.M.I. Mech. E., A. M. I. E. E., A.M.I. Mun. E., Associate I.E.E., Chief Engineer and Manager, Municipal Tramways.

Mr. K. T. Chittampalam, Proctor.

Mr. S. Cumaraswamy, A.C.A., B.A. (Lond.)

Dr. A. A. Hoover, B.SC. (Lond) PH.D. (Lond).

Mrs. Sarojini Kadirgamar, B.A. (Ceylon.)

Capt. C. A. Kanakasingham, Proctor, Trincomalee.

Mr. N. Krishnadasan, District Judge, Galle.

Prof. K. Kularatnam, PH.D. (Lond.), M.A. (Lond.), A.G.A. (Lond.), B.SC., F.R.G.S., F.S.S., M. Inst. Min. E.

Dr. P. Mahadevan, B.SC., PH.D. (Glas.), Livestock, Research Officer, Dept. of Agriculture.

Mr. V. Manickavasagar, District Judge, Colombo.

Mr. N. Manicka Iddaikadar, M.A. (Cantab.), B.SC. (Lond.), F.S.S. (Lond.), B.C.D., C.C.S.

Mr. K. Mathiapa anam, Merchant, Colombo.

Dr. S. Vithiananthan, M.A. (Cey.), PH.D. (Lond.), Lecturer in Tamil, University of Ceylon.

Mr. A. Merza, Former M.P. Kalmunai.

Mr. W. Olegasagram, Advocate, Batticaloa.

Prof. R. H. Paul, M.A. (Cantab.), B.SC. (Lond.), F.R.S.A., M.I.E.E., Prof. of Electrical Engineering, University of Ceylon.

Mr. A. Perumynar, D.R.O., Jaffna.

Mr. S. Rajanayagam, O.B.E., B.SC. Eng. (Lond.), A.C.G.I., A.M.I.E.E., Chief Telecommunication Engineer.

Mr. E. A. Rajasingham, E.D., B.SC. (Lond.), F.R.I.C.S., Lt. Col. (C.E.O.), Member, Ceylon Transport Board.

Mr. M. Rajendra, B.A. (Lond.), C.C.S.,

Mr. C. Ranganathan, Advocate, Colombo.

Mr. C. Rasiah, B.SC., A.M.I.C.E., Mech. sc. Tripos (Cantab.)

Dr. W. E. Ratnavale, M.D., (Pathology), D.C.P., D.P.H., L.M.S. (Ceylon), M.B.B.S. (Lond.) L.R.C.P. (Lond.), Pathologist.

Mr. J. M. Sabaratnam, B.A. (Lond.), D.R.O., Kalmunai.

Mr. S. Sittampalam, B.SC. (Lond.),

Prof. V. Sivalingam, M.R.C.P. (Edin.), D.T.M&H. (Eng.), L.M.S. (Cey.), Professor of Parasitology, University of Ceylon.

Mr. K. V. M. Subramaniam, J.P., U.M., Proctor, Batticaloa.

Dr. A. Sundralingam, B.SC., PH.D.(Lond.), F.R.I.C., A.M.Am.I.,

Mr. G. P. Tambyah, B.A. (Lond.), C.C.S.

Mr. K. Tharmaratnam, B.A. (Ceylon), M.A. (Lond) Statistician, Dept. of Commerce.

Dr. S. Thirunavukarasu, L.M.S. (Cey.), Dept. of Health Services.

Sir. Kanthiah Vaithianathan, Kt., C.B.E., B.SC. (Lond).

**General Secretary:**

Mr. T Rajathurai, B.SC. (Lond.), Advocate, C.C.S.

**Asst. Secretary:**

Mr. R. Rajaratnam, Asst. Director or Food Production.

**Asst. Secretaries (Ctd.)**

Mr. M. Ramasamy, B.SC. (Ceylon), M.SC. (Lond.), D I.C., F.R.L.C.

**Treasurer:**

Mr. T. S. Muttulingaswamy, B.SC. (Lond.), Manager, City Branch, Bank of Ceylon.

**Asst. Treasurers:**

Mr. E. S. Devasagayam, B.SC. (Madras.), M.SC. (Calif.)

Mr. C. Kandasamy, B.SC. (Eng.), A.M.I.C.E., Engineer, Colombo Municipal Council.

**Auditor:**

Mr. K. Satchithananda.

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

வீரகேசரி பிரஸ், கொழும்பு-10.